**விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அமைச்சு**
**நவீன தொழில்நுட்பவியல்களுக்கான**
**ஆதர் சி கிளார்க் நிறுவகம்**

# வெற்றிடங்கள்
## பணிப்பாளர் நாயகம் (CEO) பதவி

நவீன தொழில்நுட்பவியல்களுக்கான ஆதர் சி கிளார்க் நிறுவகமானது (ACCIMT), விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப அமைச்சின் நோக்கெல்லைக்குள் இயங்கும் சட்டரீதியான சபை ஒன்றாகும். மின்னணுவியல், தொடர்பாடல், தகவல் தொழில்நுட்பம், ரோபோட்டிக்ஸ் மற்றும் விண்வெளித் தொழில்நுட்பம் ஆகிய துறைகளில் ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு, பயிற்சி மற்றும் தொழில்நுட்பப் பரிமாற்றம் ஆகியவற்றின் மூலம் நவீன தொழில்நுட்பங்களின் அறிமுகத்தை விரைவுபடுத்தும் பொறுப்பு இந்நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.

சிறந்த தொடர்பாடல், தலைமைத்துவம், ஆளிடை மற்றும் ஒருங்கிணைப்பு திறன்களுடனான இலங்கை பிரசைகளிடம் இருந்து பொருத்தமான தகைமையை பெற்ற, அனுபவம் கொண்ட மற்றும் திறன்மிக்க தொழில்முறையாளர்களிடம் இருந்து அமைச்சினால் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**பணியாளர் பிரிவு: சிரேஷ்ட முகாமையாளர்**

**இந்தப் பிரிவின் பணியாளருக்கு ஒதுக்கப்பட்டுள்ள பணிகளின் பண்பு குறித்து சபையின் வரையறை:**

பணிப்பாளர் நாயகம் (CEO) நிறுவகத்தின் உயர் மட்ட நிறைவேற்று அதிகாரியாவார்.

நிறுவகத்தின் அனைத்து செயற்பாடுகள் மற்றும் நிர்வாகம் மற்றும் நிதி விவகாரங்களுக்காக பொறுப்புக் கூறல் மற்றும் பொறுப்பாவார் என்பதோடு அவர் பணிப்பாளர் சபையின் பொது வழிகாட்டல் மற்றும் கட்டுப்பாட்டின் கீழ், சபையால் ஒப்படைக்கப்படும் அதிகாரங்கள், பணிகள் மற்றும் கடமைகளைப் பயன்படுத்தி, மேற்கொண்டு நிறைவேற்றுவதுடன், நிறுவனத்தின் பணியாளர்களுக்கு தலைமையும் ஊக்கமும் வழங்கி, உத்தியோகபூர்வ அடைவுகள் மற்றும் தொழில்நுட்ப உருவாக்கம் மற்றும் பரிமாற்றத்தில் சிறந்து விளங்க வழிநடத்துவார்.

**பதவியின் பிரதான பணிகளில் உள்ளடங்குவது**

- நிறுவனத்தின் ஒட்டுமொத்த நிர்வாகம் மற்றும் நிதி கட்டுப்பாடு.
- வருவாயை அதிகரிக்கும் நோக்கில் உற்பத்தியை மேம்படுத்துவதற்கான திட்டங்களை வகுத்து, அதற்கான செயல்பாடுகளை வழிநடத்துதல்
- கொள்கை விடயங்களில் சபைக்கு ஆலோசனை வழங்கல்.
- தொடர்புடைய நிறுவனங்களுக்கு இடையே ஒருங்கிணைந்த செயற்பாடுகளுக்கு பங்கேற்றல்.
- ஏனைய தொடர்புடைய நிறுவனங்களின் சபைக் கூட்டங்களில் பங்கேற்றல்.
- சர்வதேச விடயங்களில் தொடர்புபட்ட பணியின் பங்கேற்றல்.
- உள்நாட்டு மற்றும் சர்வதேச மாநாடுகள், கருத்தரங்குகள், பட்டறைகள் முதலியவற்றில் பங்கேற்றல்.
- அறிக்கைகள் மற்றும் வெளியீடுகளை சமர்ப்பித்தல்.
- ஆளுநர் சபையினால் வழங்கப்படும் வேறு ஏதேனும் பணிகள்.

**நியமன பண்பு:**

ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கு உரித்துடையதுடன் (1994 இல் 11 ஆம் இலக்க விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப அபிவிருத்தி சட்டத்தின் 27(2) மற்றும் 27(4) பிரிவுக்கு அமைய ஐந்து ஆண்டு காலத்திற்கு செல்லுபடியான) நிரந்தரமானது.

பணியாளர் பிரிவின் சம்பள குறியீடு மற்றும் மாதாந்த சம்பள அளவு (01/2025 ஆம் இலக்க DMS சுற்றுநிருபத்தின்படி 2027.01.01 முதல் முழுமையாக பொருந்தும்.

HM 2 - 3 - 2025 - ரூபா (173,000-12 x 4850-231,200)

**தகைமைகள்:**
**வெளிவாரி: (கீழுள்ள 1 அல்லது 2)**

1.

(a) இலங்கை பல்கலைக்கழகம் ஒன்றில் இருந்து வழங்கப்பட்ட தொடர்புடைய பொறியியல் துறையில் இருந்து (மின்னணுவியல்/ தொலைத்தொடர்பு அல்லது தொடர்புடைய துறை) பொறியியலில் நான்கு ஆண்டுகள் விஞ்ஞான இளமாணி பட்டத்தை பெற்றிருந்தால், இலங்கை பொறியியல் நிறுவனத்தினால் அங்கீகரிக்கப்பட்ட இணை அங்கத்துவத்தைப் பெற்றிருத்தல் வேண்டும்

**அல்லது**

(b) இலங்கை பொறியியல் நிறுவனத்தின் இணை அங்கத்தவர் தகுதியை பெறும் வகையில், அந்த நிறுவனத்தால் நடத்தப்படும் நிர்ணயிக்கப்பட்ட பொறியியல் துறைக்கு உரிய பரீட்சையில் அனைத்து பகுதிகளையும் முழுமையாக பூர்த்தி செய்து சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

**அல்லது**

(c) ஐக்கிய இராச்சிய பொறியியல் சபையில் பரிந்துரைக்கும் பட்டய பொறியியலாளர் தகுதியைப் பெற தேவையான கல்வித் தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில், தொடர்புடைய பொறியியல் துறையில், ஐக்கிய இராச்சிய பொறியியல் சபை பரீட்சை அல்லது அதன் இணை நிறுவனத்தால் நடத்தப்படும் பரீட்சையின் அனைத்து பகுதிகளையும் முழுமையாக பூர்த்தி செய்து சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

**அல்லது**

(d) இலங்கை பொறியியல் நிறுவனத்தின் இணை அங்கத்துவ தகுதியை பெறும் வகையில், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் பல்கலைக்கழகம் அல்லது நிறுவனத்தால் வழங்கப்படும் பொறியியல் விஞ்ஞான இளமாணி பட்டத்திற்கு சமமான பொறியியல் பட்டத்தை பெற்றிருத்தல் வேண்டும்.

**அல்லது**

(e) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் அல்லது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றிலிருந்து, தொடர்புடைய துறையில் (பௌதிகவியல் / வானியல் / விண்வெளி விஞ்ஞானம் / Geomatics / கணிதம் அல்லது தொடர்புடைய துறை) நான்கு ஆண்டுகள் முழுநேர விஞ்ஞான இளமாணி பட்டத்தை பெற்றிருத்தல் வேண்டும்.

**மற்றும்**

அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் தொடர்புடைய துறையில் PhD பட்டம் பெற்றிருத்தல் வேண்டும் அல்லது இலங்கை பொறியியல் நிறுவனத்தில் பட்டய பொறியியலாளர் மற்றும் நிறுவனத்தின் Fellow தொழில்முறை பதிவை பெற்றிருத்தல் வேண்டும் (CEng., FIESL).

**மற்றும்**

பொறியியலாளர்/ விஞ்ஞானி ஒருவராக குறைந்தது 20 ஆண்டுகள் அனுபவம் அல்லது இதே போன்ற பணிப்பொறுப்பில், ஒப்பிடத்தக்க அனுபவம், அதில் அரச திணைக்களம், அரச கூட்டுத்தாபனம், சட்டரீதியான சபை அல்லது புகழ்பெற்ற வணிக நிறுவனம் ஒன்றில் பல்துறை குழுக்களை வழிநடத்தி, நிர்வகிக்கும் திறன் மற்றும் மனிதவளங்கள் மற்றும் ஏனைய வளங்களை சரியான முறையில் ஒதுக்கி திறம்பட நிர்வகித்த நிரூபிக்கப்பட்ட தளப் பதிவுடன் சிரேஷ்ட முகாமைத்துவ தரத்தில் 05 ஆண்டுகளுக்கு குறையாத அனுபவத்தைப் பெற்றிருத்தல் வேண்டும்.

2.

(a) இலங்கையில் உள்ள பல்கலைக்கழகங்களில் வழங்கப்படும் பொறியியல் துறையில் (மின்னணுவியல் / தொலைத்தொடர்பு அல்லது தொடர்புடைய பொறியியல் துறையில்) நான்கு ஆண்டுகள் முழுநேர விஞ்ஞான இளமாணி பட்டத்தை பெற்றிருத்தல் வேண்டும். இந்த பட்டம் இலங்கை பொறியியல் நிறுவனத்தின் இணை அங்கத்துவ தகுதி வழங்குவதற்காக அங்கீகரிக்கப்பட்டதாக இருத்தல் வேண்டும்.

**அல்லது**

(b) இலங்கை பொறியியல் நிறுவனத்தின் இணை அங்கத்துவ தகுதி பெறும் வகையில், அந்த நிறுவனத்தால் நடத்தப்படும் நிர்ணயிக்கப்பட்ட பொறியியல் துறைக்கு உரிய பரீட்சையின் அனைத்து பகுதிகளையும் முழுமையாக பூர்த்தி செய்து சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

**அல்லது**

(c) ஐக்கிய இராச்சிய பொறியியல் சபை பரிந்துரைக்கும் பட்டய பொறியியலாளர் அந்தஸ்தைப் பெற தேவையான கல்வித் தகுதிகளை பூர்த்தி செய்யும் வகையில், தொடர்புடைய பொறியியல் துறையில், ஐக்கிய இராச்சிய பொறியியல் சபை அல்லது அதன் இணை நிறுவனத்தால் நடத்தப்படும் பரீட்சையின் அனைத்து பகுதிகளையும் முழுமையாக பூர்த்தி செய்து சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

**அல்லது**

(d) வேறு ஏதேனும் பல்கலைக்கழகம் அல்லது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றால் வழங்கப்படும் விஞ்ஞான பொறியியல் இளமாணி பட்டத்திற்கு இணையான பொறியியல் பட்டத்தை பெற்றிருத்தல் வேண்டும். இதன் மூலம் இலங்கை பொறியியல் நிறுவனத்தின் இணை அங்கத்துவ தகுதியை பெறுதல் வேண்டும்.

**மற்றும்**

இலங்கை பொறியியல் நிறுவனத்தில் பட்டய பொறியியலாளர் மற்றும் நிறுவன உறுப்பினர் என தொழில்முறை பதிவை பெற்றிருத்தல் வேண்டும் அல்லது ஐக்கிய இராச்சிய பொறியியல் சபையில் பட்டய பொறியியலாளர் என தொழில்முறை பதிவை பெற்றிருப்பதுடன், தொடர்புடைய பொறியியல் துறையில் ஐக்கிய இராச்சியத்தின் ஒரு தொழில்முறை பொறியியல் நிறுவனத்தின் நிறுவன உறுப்பினராக இருத்தல் வேண்டும்.

**மற்றும்**

பொறியியலாளர் ஒருவராக குறைந்தது 20 ஆண்டுகள் அனுபவம் அல்லது இதே போன்ற பணிப்பொறுப்பில், ஒப்பிடத்தக்க அனுபவம், அதில் அரச திணைக்களம், அரச கூட்டுத்தாபனம், சட்டரீதியான சபை அல்லது புகழ்பெற்ற வணிக நிறுவனம் ஒன்றில் பல்துறை குழுக்களை வழிநடத்தி, நிர்வகிக்கும் திறன் மற்றும் மனிதவளங்கள் மற்றும் ஏனைய வளங்களை சரியான முறையில் ஒதுக்கி திறம்பட நிர்வகித்த நிரூபிக்கப்பட்ட தளப் பதிவுடன் சிரேஷ்ட முகாமைத்துவ தரத்தில் 10 ஆண்டுகளுக்கு குறையாத அனுபவத்தைப் பெற்றிருத்தல் வேண்டும்.

**குறிப்பு:** வர்த்தக நிர்வாகத்தில் அங்கீகரிக்கப்பட்ட பட்டப்பின்படிப்பு பட்டம் ஒன்றை பெற்றுள்ள அபேட்சகர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

**உள்ளக:**
நவீன தொழில்நுட்பவியல்களுக்கான ஆதர் சி கிளார்க் நிறுவகத்தின் சிரேஷ்ட முகாமையாளர் (HM 2-2) பிரிவில் பிரதிப் பணிப்பாளர் நாயகம் (தொழில்நுட்ப செயற்பாடுகள்/ திட்டமிடல் மற்றும் அபிவிருத்தி/ விண்வெளி தொழில்நுட்பம் மற்றும் பயன்பாடுகள்) பதவி ஒன்றில் குறைந்தது 5 ஆண்டுகள் திருப்திகரமான சேவை.

**மற்றும்**

பல்துறை குழுக்களை வழிநடத்தி நிர்வகிக்கும் நிரூபிக்கப்பட்ட திறனை கொண்டிருத்தல் வேண்டும். மனிதவளம் மற்றும் ஏனைய வளங்களைச் சரியான முறையில் ஒதுக்கி திறம்பட நிர்வகித்த அனுபவம் இருத்தல் வேண்டும்.

**குறிப்பு:** வர்த்தக நிர்வாகத்தில் அங்கீகரிக்கப்பட்ட பட்டப்பின்படிப்பு பட்டம் ஒன்றை பெற்றுள்ள அபேட்சகர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

**வயது:**
35 வயதுக்கு குறையாதவராகவும் 55 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். உள்ளக அபேட்சகர்களுக்கு உயர் வயதெல்லை பொருந்தாது.

**மற்றவைகள்:**

**அனைத்து விண்ணப்பதாரர்களும்,**

i. இலங்கை பிரசையாக இருத்தல் வேண்டும்.
ii. பதவிக்கு தொடர்புடைய பணிகளை மேற்கொள்வதற்கும் நாட்டின் எந்தவொரு பகுதியிலும் பணியாற்றுவதற்கும் உடல் மற்றும் உளத் தகைமையை பெற்றிருத்தல் வேண்டும்.
iii. சிறந்த பண்புடையவராக இருத்தல் வேண்டும்.

**ஏனைய நன்மைகள்:**

a) EPF – ஊழியர் 10% ACCIMT 15%
b) ETF - ACCIMT 3%
c) தொடர்புடைய தொழில்முறை நிறுவனங்களில் அங்கத்துவ கட்டணத்தை மீளச் செலுத்துதல்.
d) குறிப்பிட்ட வரம்புகளுக்கு உட்பட்டு indoor/outdoor சிகிச்சையை உள்ளடக்கிய மருத்துவ திட்டம்.
e) அரச ஒழுங்குமுறைகளின்படி உத்தியோகபூர்வ வாகனம் வழங்கப்படும்.
இறுதித் திகதி: 2026.07.15

**விண்ணப்பிக்கும் முறை:**
அரச திணைக்களங்கள்/ கூட்டுத்தாபனங்கள் மற்றும் சட்டரீதியான சபைகளின் அதிகாரிகள் தமது விண்ணப்பங்களை குறித்த நிறுவனங்களின் தலைவர்கள் ஊடாக சமர்ப்பித்தல் வேண்டும்.

விண்ணப்பதாரர்கள் இரு உறவினர் அல்லாத நடுவர்களின் பெயர்கள் மற்றும் முகவரிகளுடன் சேர்த்து சான்றிதழ்களின் நிழல்பிரதிகளுடன் முழுமையான சுயவிபரக்கோவையை கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "ACCIMT இன் பணிப்பாளர் நாயகம் (CEO) பதவி" என்று குறிப்பிட்டு கீழுள்ள முகவரிக்கு கிடைப்பதற்கு 2026.07.15 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

**செயலாளர்,**
**விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப அமைச்சு,**
**3ஆவது மாடி, 1ஆவது கட்டம்,**
**"செத்சிறிபாய",**
**பத்தரமுல்லை.**